# DEO MAIN - 2023

# PERCENTAGE ASSIGNMENT

1. In every gram of gold, a goldsmith mixes 0.25 grams of silver and 0.05 grams of copper. What is the percentage of gold, silver and copper in every gram of gold?
ஒவ்வொரு கிராம் தங்கத்திலும், ஒரு பொற்கொல்லர் 0.25 கிராம் வெள்ளி மற்றும் 0.05 கிராம் தாமிரம் ஆகியவற்றைக் கலக்கிறார். ஒவ்வொரு கிராம் தங்கத்திலும் தங்கம், வெள்ளி மற்றும் செம்பு எவ்வளவு சதவீதம் உள்ளது?

2. The price of an article was 1800 rupees last month. The price is reduced by 10% this month .The shopkeeper says this price would be increased by 10% next month. What would be the price next month?
சென்ற மாதம் ஒரு பொருளின் விலை 1800 ரூபாய். இந்த மாதம் 10% விலை குறைக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் இந்த விலை 10% அதிகரிக்கப்படும் என்று கடைக்காரர் கூறுகிறார். அடுத்த மாதம் என்ன விலை இருக்கும்?

3. Velan's monthly income is ₹ 10,000. He spends 60% of it on family expenses, 10% on medical expenses, 5% on donations and saves by 25%. Find the amount he spends on each item?
வேலனின் மாத வருமானம் ரூபாய் 10,000. அதில் 60% குடும்பச் செலவுக்கும், 10% மருத்துவச் செலவுக்கும், 5% நன்கொடைக்கும், 25% சேமிப்பிற்கும் செலவிடுகிறார். ஒவ்வொன்றிற்கும் அவர் செலவழிக்கும் தொகையைக் காண்க.

4. Rs 3500 is to be shared among three people so that the first person gets 50% of the second, who in turn gets 50% of the third. How much will each of them get?
3500 ரூபாய் மூன்று நபர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், முதல் நபருக்கு இரண்டாவது நபரின் பங்கைபோல் 50% மும் இரண்டாவது நபருக்கு மூன்றாவது நபரின் பங்கைபோல் 50% மும் கிடைக்கும். ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் பங்குத்தொகையை காண்க.

5. In an examination, the maximum marks are 900. A student gets 33% of the maximum marks and fails by 45 marks. What is the passing mark? Also, find the percentage of pass mark.
ஒரு தேர்வில், அதிகபட்ச மதிப்பெண்கள் 900. ஒரு மாணவர் அதிகபட்ச மதிப்பெண்களில் 33% பெற்று 45 மதிப்பெண்களில் தோல்வியடைகிறார். தேர்ச்சி மதிப்பெண் என்ன? மேலும், தேர்ச்சி மதிப்பெண் சதவீதத்தைக் கண்டறியவும்.

6. In a Maths Quiz of 60 questions, Amala got 90% correct answers and Roger got 80% correct answers. How many correct answers did each give? What percent is Roger's correct answers to Amala's correct answers?
60 கேள்விகள் கொண்ட கணித வினாடிவினாவில் அமலா 90% சரியான விடைகளையும், ரோஜர் 80% சரியான விடையையும் பெற்றனர். ஒவ்வொருவரும் எத்தனை சரியான பதில்களைச் சொன்னார்கள்? அமலாவின் சரியான பதில்களுக்கு ரோஜரின் சரியான பதில்கள் எத்தனை சதவீதம்?

7. 5% income of A is equal to 15% income of B and 10% income of B is equal to 20% income of C. If the income of C is Rs.2000, then find the total income of A, B and C.
A இன் 5% வருமானம் B இன் 15% வருமானத்திற்கும் B இன் 10% வருமானம் C இன் 20% வருமானத்திற்கும் சமம். C இன் வருமானம் ரூ.2000 எனில் A, B மற்றும் C இன் மொத்த வருமானத்தைக் காண்க.

8. A Man spends 40% of his income for his food, 15% for his clothes and 20% for house rent and saves the rest. How much percent does he save? If his income is Rs. 34,400 find the amount of his savings.
ஒருவர் தம் வருமானத்தில் 40% உணவுக்காகவும், 15% உடைக்காகவும் 20% வீட்டு வாடகைக்காகவும் செலவிடுகின்றார். மீதியை சேமிக்கின்றார். அவர் வருமானம் ரூ 34,400 எனில், அவர் எவ்வளவு சேமிக்கின்றார்?

9. Ram's income is 20% less than Shyam's. How much is Shyam's income more than Ram's in percentage terms?
ஷியாமின் வருமானத்தை விட ராமின் வருமானம் 20% குறைவு. சதவீத அடிப்படையில் ராமின் வருமானத்தை விடஷியாமின் வருமானம் எவ்வளவு அதிகம்?

10. The difference between 42% of a number and 28% of the same number is 210. What is 59% of that number?
ஒரு எண்ணின் 42%க்கும் அதே எண்ணின் 28%க்கும் உள்ள வித்தியாசம் 210 எனில், அந்த எண்ணின் 59% காண்க.

11. 40% of 4.5 + $x$ % of $\frac{2}{3}$ = 20% of 10 then find the value of $x$

4.5 ன் 40% + $\frac{2}{3}$ ன் $x$ % = 10 ன் 20%எனில் $x$ இன் மதிப்பைக் கண்டறியவும்

12. A's salary increases by 20% and then decreases by 20%. What is the net percentage change A's salary?

A இன் சம்பளம் 20% அதிகரித்து, பின்னர் 20% குறைகிறது. A இன் சம்பளத்தின் நிகர சதவீத மாற்றம் காண்க?

13. The value of a machine depreciates every year by 5%. If the present value of the machine be Rs. 100000, what will be its value after 2 years?

ஒரு இயந்திரத்தின் மதிப்பு ஆண்டுதோறும் 5% தேய்மானம் அடைகின்றது. அதன் தற்போதைய மதிப்பு ரூ.100000, 2 வருடம் பின்பு அதன் மதிப்பு என்ன?

14. An alloy contains 20% copper 40% zinc and the rest nickel. find the grams the quantity of each of the contents in 1 kg of alloy.

ஒரு உலோக கலவையில் 20% செம்பு, 40 % துத்தநாகம் மற்றும் மீதம் நிக்கல். 1 கிலோ கலவையில் ஒவ்வொரு உள்ளடக்கப்பொருளின் அளவை கிராமில் குறிக்க

15. A team played 25 matches in a season and won 36% of them. Find the number of matches lost by the team.

ஒரு பருவத்தில் ஒரு குழு 25 போட்டிகள் விளையாடுகிறது. அதில் 36% வெற்றி பெறுகிறது. அந்தக் குழு தோல்வியடைந்த போட்டிகளின் எண்ணிக்கையை காண்க.